**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்**

**MACOP No. 80/2017**

| **எ.ம.சா : 1** | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| **பெயர்:** | : | **திரு. விக்னேஷ் கார்த்திகேயன்** | **தொழில்** | : | **இளநிலை உதவியாளர், RTO Office, திண்டுக்கல்** |
| **தகப்பனார் பெயர்** | : | **திரு. கோபால்** | **மதம்** | : | **இந்து** |
| **கிராமம்/தாலுகா** | : | | **வயது** | : | **38** |
| **மாவட்டம்** | | **திண்டுக்கல்** | **தேதி** | : | **29.10.2025** |

**சாட்சி அழைப்பாணையின் பேரில் ஆஜர் (Authorized Officer). இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது.**

---

3-ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணை:-

நான் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் எனக்கு ஆஜராக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். **எனக்கு வழங்கிய அதிகாரக் கடிதம் சா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 1-ம் எதிர்மனுதாரரான குப்பனக்கவுண்டர் மகன் பழனிச்சாமிக்கு நிரந்தர ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. 03.10.2012 முதல் 02.04.2013 வரை பழகுநர் ஓட்டுநர் உரிமம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. **அது சா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி உரிமத்தை வைத்துக் கொண்டு பொதுமக்கள் நடமாடும் பொது சாலைகளில் வண்டியை ஓட்டுவது தவறு.

<u>மனுதாரர் தரப்பில் விசாரணை :-</u>

பழகுநர் ஓட்டுநர் உரிமம் உள்ளவர் தன் அருகே முறையான ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒரு நபரை வைத்துக் கொண்டு வாகனத்தை இயக்கலாம் என்று சா.சா.ஆ. 2 ல் குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை :-</u> இல்லை.

Taken down by me/before me in open court on 29.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.